மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, ஏற்கனவே 24·75 லட்சம் மதிப்பீட்டில் பாசனத்துறை தலைமைப் பொறியாளர் அரசுக்கு திட்டம் அனுப்பியுள்ளார். நீர் வரத்து 3 ஆண்டுகாலம் கணக்கெடுக்கப்படவேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டதால், நில வரத்து குறித்து வருவாய் வாரியம் கணக்கெடுத்து வருகிறது. இரண்டாண்டு நீர் வரத்து கணக்குகள் எடுக்கப்பட்டு விட்டன. இந்த ஆண்டு 3-வது ஆண்டு நீர் வரத்து கணக்கு எடுக்கப்பட்டு வருகிறது. அது எடுக்கப்பட்டு முடிந்தபின், அதனை ஆய்வு செய்து, அதற்குப் பிறகு அரசு முடிவு செய்யும். நீர் வரத்து கணக்கு ஆய்வு செய்யப்பட்டபின் முடிவு செய்யவேண்டுமென்று இருக்கின்ற காரணத்தால், இந்த மூன்றாவது ஆண்டு கணக்கு எடுக்கப்பட்டு முடிந்தவுடன், இந்த ஆண்டு இறுதிக்குள் நிச்சயமாக அரசு ஒரு நல்ல முடிவை மேற்கொள்ளும்.

பெரியாறு மேம்பாட்டுத் திட்டத்தினால் பயன்பெறும் நிலங்கள்.

*வினா எண் 115—திரு ஏ. பாலுச்சாமி: மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

பெரியாறு மேம்பாட்டுத் திட்டத்தினால் எவ்வளவு நிலங்கள் விளைநிலங்களாக மாற்றப்பட்டுள்ளது?

(அ) வரிச்சூர் குன்னத்தூர் கண்மாய் நிலங்களும் இந்த திட்டத்தில் சேர்க்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) 25,463 ஏக்கர் நிலங்களுக்குப் புதிதாகப் பாசன வசதி அளிக்க திட்டமிடப் பட்டுள்ளது.

(ஆ) ஏற்கனவே பெரியாறு வைகை பாசனத்தில் உள்ள வரிச்சூர் மற்றும் குன்னத்தூர் கண்மாய் நிலங்கள் இந்த திட்டத்தினால் பயன்பெறும்.

திரு. ஏ. பாலுச்சாமி: தலைவரவர்களே, இந்த 25,000 ஏக்கருக்குப் பாசன வசதி அளிக்க எவ்வளவு செலவாகும்? மேலும் கூடுதலாக நிலங்களைச் சேர்த்துக்கொள்ளும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு கே. இராஜா முகமது: தலைவரவர்களே, இறுதியாக இந்தத் திட்டத்தை உலக வங்கியின் ஆலோசனையின் பேரில் மதிப்பிட்டு, 44·50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஜூலை 1981 ஆம் ஆண்டு நிர்வாக ஒப்புதலோடு இந்தத் திட்டம் இப்போது எடுத்துக்கொள்ளப்பட்டு வேலைகள் நடந்து வருகின்றன. இதற்குப் பின்னால் விடுபட்டுப்போன பல பகுதி

களையும் சேர்க்க வேண்டுமென்று பல இடங்களிலிருந்து வந்த கோரிக்கைகளை ஏற்று மேலும் கூடுதலாக 24,000 ஏக்கர் நிலங்கள் எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற ஒரு திட்டத்தை அரசு பரிசீலனை செய்து வருகிறது.

திரு. ஏ. பாலுச்சாமி: தலைவரவர்களே, மேலும் எந்த எந்த இடங்களில் எவ்வளவு ஏக்கர் நிலம் இதனால் பயன்பெறும்? அதில் இந்த குன்னத்தூர் கண்மாய் நிலங்கள் சேர்க்கப்பட்டிருக்கிறதா? அதற்கு எவ்வளவு ரூபாய் செலவு செய்ய உத்தேசம் இருக்கிறது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, முகவை மாவட்டத்தில் சிவகங்கை வட்டம், மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டி வட்டம், திருமங்கலம் வட்டம் ஆகிய வட்டங்கள் பயன்பெறும் வகையில் ஏற்கெனவே 1978-லே ஒரு திட்டத்தைத் தயாரித்து, பிறகு உலக வங்கியின் ஒப்புதலோடு வேறு ஒரு திட்டத்தைத் தயாரித்தோம். இப்போது திரும்பவும் அதை ஆய்வுசெய்ய வேண்டுமென்று முடிவுசெய்து கூடுதலாக 24,000 ஏக்கர் நிலங்கள் சேர்த்துக் கொள்ளப்பட பரிசீலனை நடந்துகொண்டிருக்கிறது. இந்த சீரமைப்பின் மூலம் பயன்படும் ஒரு திட்டமாக இதை தயாரிக்கும்போது மேலும் 38.68 கோடி ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. அது பரிசீலனையில் இருக்கிறது. இதையும் சேர்த்தால் கிட்டத்தட்ட 49,000 ஏக்கர் பயன்பெறும்.

திரு. க. பாரமலை: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 25,000 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளதாகச் சொன்னார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது வைகை பாசனத்தினுடைய தண்ணீர் வரத்து மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. வருசநாட்டு மலையிலுள்ள காடுகளை அழித்து விவசாயம் செய்து கொண்டிருப்பதால் தண்ணீர் வரத்து குறைந்திருக்கிறது. அதனால் வைகை ஆயக்கட்டுக்கு பாசன வசதி நிச்சயமற்ற நிலையில் இருப்பதால் இந்த பெரியாறு மேம்பாடு திட்டத்தின் மூலம் மிச்சப்படுகிற தண்ணீரை வைகை ஆயக்கட்டுநிலங்களுக்குக் கொடுத்து பாசன வசதியை உறுதிபடுத்தும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுவதுபோல 15,574 ஏக்கர் மாமூல் கோடை நிலங்களுக்கும் 1,457 ஏக்கர் மேட்டுப் பகுதி நிலங்களுக்கும் ஒட்டுமொத்தமாக பாதிக்காத வகையில் ஏற்கெனவே அளிக்கப்பட்டிருக்கிறது. அதை நவீனப் படுத்துவதன் மூலம் கிடைக்கக்கூடிய உபரி தண்ணீர் முகவை மாவட்டத்தில் சிவகங்கை, மதுரையில் உசிலம்பட்டி, திருமங்கலம் ஆகிய வட்டங்கள் பயன்பெறும் வகையில் அவை சேர்க்கப் பட்டுள்ளன. ஆகவே, வைகை ஆயக்கட்டு நிலங்கள் நிச்சயமாகப் பாதிக்கப்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.